மாகாணக் கல்வி அமைச்சு சுற்றறிக்கை இல :- 02/2019

எனது இல: NP/3/2/4/EB/2019
மாகாணக் கல்வி அமைச்சு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
13.05.2019.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
வடக்கு மாகாணம்.

**<u>வடக்கு மாகாண பாடசாலைப் பணியாளர் சேவையில் தரம் III இல் உள்ளவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2014(I) 2019</u>**

மேற்படி பதவியில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது அப் பதவியின் தற்போது நடைமுறையிலுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் காலத்திற்கு காலம் அனுமதிக்கப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக 2019 ஆம் ஆண்டு ஆனி மாதம் நடாத்தப்படும். குறித்த பரீட்சையானது யாழ்ப்பாண மாவட்டத்திலே நடாத்தப்படும்.

**02. தகைமைகள்:**

- குறித்த பதவிகளின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அச் சேவையின் தரம் III இல் கடமையாற்றும் அலுவலர்கள் 1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**03. விண்ணப்பப் படிவம்**

- விண்ணப்பங்கள் அனுப்பிவைக்க வேண்டிய இறுதி திகதி 27.05.2019 ஆகும்.
- விண்ணப்பமானது இச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இவ் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக தமது விண்ணப்பங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக **"செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

- விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வடக்கு மாகாண பாடசாலைப் பணியாளர் சேவையின் தரம் III இல் உள்ளவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2014(I) 2019"** எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**04. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:**

- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பரீட்சைக்கும் பரீட்சகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(I) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

(II) செல்லுபடியாகும் இலங்கை கடவுச்சீட்டு (Passport)

மேற்குறிப்பிட்ட ஆவணங்களில் ஏதாவதொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சகருக்கு உண்டு.

**05. விண்ணப்பங்கள்:**

விண்ணப்பத்தின் இல 1 முதல் 3 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் கணனியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் முன்னோட்டப் பிரதி என்பன அனுப்பிவைத்தல் ஆகாது என அறிவுறுத்தப்படுகின்றது.

மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

**06**. விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு, வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சகருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் அது பற்றிய பின்வரும் விபரங்களுடன் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பி வைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம்.

**07.** இப் பரீட்சைக்கு தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்களால் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் பிரிவு 19 இற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**08.**அலுவர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

***09.*** பரீட்சைக்கு தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளினது பெறுபேறுகளும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளரினால் அனுப்பிவைக்கப்படும்.

***10. பரீட்சைத் திட்டம்:.***

பாடசாலைப் பணியாளர் தரம் III இல் உள்ளவர்களுக்கான 1 வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையின் போது அலுவலர்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் வாய்மொழிப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படும்.

- குறித்த பணியாளர் தான் பணிபுரியும் பாடசாலையில் ஒப்படைக்கப்படும் பணிகள் தொடர்பில் போதிய அறிவைப் பெற்றுள்ளாரா என்பதனை அளவிடுதல்.
  ***(30 புள்ளிகள்)***
- வழமையான அலுவலக முறை மற்றும் தாபன நிர்வாக முறைகள் தொடர்பில் தனது சேவையுடன் தொடர்புடைய அறிவினைக் கொண்டுள்ளாரா என்பதை அளவிடுதல். ***(30 புள்ளிகள்)***
- அலுவலருக்கு ஒப்படைக்கப்பட்ட பல்வேறு பணிகள் தொடர்பில் போதிய அறிவினையும் தேர்ச்சியையும் பெற்றுள்ளாரா என்பதனை அளவிடுதல்.
  ***(40 புள்ளிகள்)***

***11.*** இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்களினை தங்கள் வலயத்தின் கீழ் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் இத் தகவல்களை வட மாகாண இணையத்தளமான www.np.gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளமான www.edumin.np.gov.lk எனும் முகவரியிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

**குறிப்பு:-** இப் பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ் விடயம் தொடர்பாகவும் மாகாண கல்வி அமைச்சு செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும் என்பதுடன் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலங்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் தமிழ் மொழியே மேலோங்குதல் வேண்டும்.

***சி.சத்தியசீலன்***
செயலாளர்,
கல்வி அமைச்சு,
வட மாகாணம்.